1973 பிப்ரவரி 7]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இதைப்பற்றி நேற்றைய தினம் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் மாண்புமிகு மணலி கந்தசாமி அவர்கள் பேசியபொழுது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்று வேண்டுமென்றே இவ்வளவு துணைக் கேள்விகள் அனுமதித்தேன். இப்பொழுது கேட்கப்பட்ட துணைக் கேள்விகளில் இரண்டு கேள்விகளைத் தவிர மற்ற கேள்விகளுக்கும் மூலக்கேள்விக்கும் சம்பந்தம் எதுவும் இல்லை. இந்த முறையை கனம் உறுப்பினர்கள் தவிர்க்க வேண்டும் என்பதற்காகத் தான் இவ்வளவு நேரம் பொருமையோடு இவ்வளவு துணைக் கேள்விகளையும் அனுமதித்தேன். இதைப் பேரவையும் கவனித்துக் கொண்டிருக்கிறது. மூலகேள்விக்கு சம்பந்தமில்லாதது மட்டுமல்ல. முதலில் ஒரு உறுப்பினர் கேட்ட கேள்வியையே அடுத்த உறுப்பினர் திரும்பவும் கேட்கிறார். அதனால் முதலில் கேட்கப்பட்ட கேள்விகள் பதில்களை உறுப்பினர்கள் கவனிக்கவில்லை என்பதைக் காட்டிக்கொள்கிறார்கள். இது மிகவும் தவறான முறை, விரும்பத்தகாத முறை யாருக்கும் பலன் இல்லாத முறை. மீண்டும் உறுப்பினர்களுக்கு உரிமையோடும், அன்போடும் தெரிவித்துக்கொள்கிறேன். மூலக் கேள்விக்கு தொடர்பு உள்ள, சம்பந்தம் உள்ள துணைக் கேள்விகளைத்தான் உறுப்பினர்கள் கேட்க வேண்டும் என்று அத்துணை உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்கிறேன். இந்த முறையை இன்னொரு முறை நான் அனுமதிக்கப்போவதில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

Railway lines to Kanyakumari

*52 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether the Government are aware that the Union Planning Commission has cleared the Railway Projects to Kanyakumari;

(*b*) if so the details thereof; and

(*c*) the steps taken by the Government to expedite this project by the Union Government?

[1973 பிப்ரவரி 7

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :

(*a*) (*b*) & (*c*) The State Government recommended the scheme for formation of a new railway line from Tirunelveli to Trivandrum *via* Nagercoil with a branch line from Nagercoil to Kanyakumari to be taken up under the IV Five-Year Plan. The Government of India have sanctioned the scheme and the work has been taken up.

திரு. என். டென்னிஸ் : இந்த ரயில் பாதையில் குளச்சல் துறைமுகம் தொடர்பு படுத்தப்படாமல் இருக்கிறது. குளச்சல் துறைமுகத்தையும் இந்த ரயில் பாதையோடு இணைப்பதற்கான அவசியத்தை, மக்களின் வேண்டுகோளை மத்திய சர்க்காருக்கு மாநில சர்க்கார் அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த விவரம் இப்பொழுது என்னிடம் இல்லை. எனக்கு ரயில் இலாகாவிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கிற பதிலில் நான் சொல்லிய விவரங்கள் இருக்கின்றன. மற்ற விவரங்கள் என்னிடம் இல்லை. இந்த விவரம் வேண்டுமானால் ரயில்வே இலாகாவிற்குத் தெரிவிக்கப்படும்.

திரு. ஏ. ஆர். சுப்பையா : வேலைகளை யூனிட் யூனிட்டாகப் பிரித்து ரூ. 15 லட்சம் அளவுக்கு டெண்டர்கள் கூப்பிடுகிறார்கள். சாதாரணமாக ஆட்கள் எடுப்பதற்கு வழியில்லை. மகாராஷ்டிராவில் பஞ்சப் பிரதேசம் என்ற காரணத்தினால் ரயில்வே வேலைகளை சாதாரண மக்களுக்கு வழங்கவேண்டுமென்று சிறு சிறு யூனிட்டு களாக வைத்து, டெண்டர்கள் அழைப்பதன் மூலம் சாதாரண மக்களுக்கு வேலை வாய்ப்புகள் கொடுப்பதுபோல், இங்கேயும் கொடுப்பதற்கு சர்க்கார் வழி செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது மத்திய சர்க்கார் செய்யவேண்டிய வேலை. நம்முடைய சர்க்காரைப் பொறுத்தவரையில் ஒன்றும் செய்ய முடியாது.

திரு. எ. சுவாமிதாஸ் : இந்த ரயில்வே லைன் அமைப்பதற்கு லாண்டு அக்விசிஷன் செய்யக்கூடிய பணியில் ஈடுபடுவதற்கு நமது ரெவின்யூ இலாகாவிலிருந்து நமது ஊழியர்களை விட்டுக் கொடுத் திருக்கிறோம். அந்த வேலையை ஆற்றுகின்ற அவர்களுக்கு ஸ்பெஷல் அலவன்ஸ்—அவர்கள் காடுமேடுகளில் அலைந்தெடுத்து வேலை செய்யவேண்டியிருப்பதால், சம்பளத்தோடு சேர்த்து

1973 பிப்ரவரி 7]

ஸ்பெஷல் அலவன்ஸ் கொடுப்பதற்கு இந்த அரசு ரயில்வே இலாகாவைக் கேட்டுக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : லாண்டு அக்விசிஷனுக்கு இப்பொழுது necessary staff has been sanctioned to attend to the work of land acquisition. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலே நில ஆர்ஜிதம் செய்வதற்கு எந்த வழிவகைகளை நாம் கடைப்பிடிக்கிறோமோ அதே வழிவகைகளைத் தான் நாம் கடைப்பிடிக்க முடியுமே தவிர, இதற்காக தனிப்பட்ட முறையில் சலுகைகள் கேட்பதற்கு இடமில்லை.

கும்பகோணத்தில் புதிய இரயில்வே மேம்பாலம்

*53 வினா—**திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்பகோணத்தில் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி எப்போது துவங்கப்படவிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒப்பந்த புள்ளிகள் முடிவாகி வேலை துரித நிலையில் இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : கும்பகோணத்தில் அமைக்கப்பட்டு வருகிற ரயில்வே பாலத்திற்கு உள்ள எஸ்டிமேட் தொகை எவ்வளவு என்பதனையும், அது எப்பொழுது கட்டி முடிக்கப்படும் என்பதனையும் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ரூ. 15 லட்சத்திற்கு எஸ்டிமேட் தயார் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. டெக்னிகல் சாங்ஷன் ரூ. 14,50,000-க்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது இந்த வேலைகளுக்கு 9—2—1972-ல் காண்டிராக்ட் ஒப்படைக்கப்பட்டு, அந்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த வேலைகள் நடைபெறுவதிலே ரயில்வே இலாகாவில் சில பிரச்னைகள் இருந்தன. அந்தப் பிரச்னைகளை நம்முடைய தலைமைப் பொறியாளர் தலையிட்டு, முடித்துவைத்து, இப்பொழுது வேலைகள் துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.